

**உலகில் அமைதியும் சந்தோஷமும்.....**

**Dr.மரியா மாண்டிசொரி அம்மையாரின் கல்விக் கோட்பாடுகள் மூலம் அறியப்படும் செய்திகள். [PART 2 - கல்வி என்ன செய்ய வேண்டும்?]**

அறிவியல் வளர்ச்சிக் கல்வி உதவ வேண்டும், அதே சமயம் சமுதாயக் கட்டமைப்பையும் பொறுப்பையும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயற்கையாக வளர்க்க கல்வி உதவ வேண்டும்.

மனிதன் மேற்கூறியவற்றைப் பெறவும் நிறைவு வாழ்க்கை பெறவும் மாணவர்களுக்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தித் தரவும். அத்துடன் அவர்களுக்கு ஆன்மீக வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகும். ஆன்மீகம் வேறு மதம் வேறு என்பதை இவ்விடத்தில் வாசகர்கள் புரிந்து கொள்ளுதல் மிக முக்கியம்.

தனிமனித ஒழுக்கமும் சுதந்திரமும் பொறுப்புணர்வும் மெதுவாக சமுதாயத்தின் நலனுடன் பிணையக் கல்வி வழி செய்ய வேண்டும்.இதன் மூலமே புதிய சமுதாயம் உருவாகும்.

மனிதன் இயற்கையுடன் இணைந்து ஒற்றுமையாய் வாழவே இவை மிகவும் தேவை.வெறும் பேச்சாலும் அறிவுரையாலும் இதை அடைய முடியாது. ஆனால் முறையான வாழ்க்கைப் பயிற்சிகளாலும் கல்வித் திட்டங்களாலும் இவற்றை அடையமுடியும்.

நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய எதார்த்த வாழ்வியலுடன் இணைந்த கல்வியைத் திட்டமிட்டு மாணவர்களுக்கு அளிப்பதை ”மிக உயர்ந்த பணி” என்று கூறுகிறேன். அதுவே கல்விக்கூடங்களின் மாபெரும் பணியும் ஆகும். அதுவே இக்காலத்தின் உடனடித் தேவையும் ஆகும்.

ஒரே நாளில் மாயாஜாலம் போல மனிதன் மாறிட முடியாது. அம்மாற்றம் மிகச்சிறிய வயது முதலே வர கல்வி ஊக்குவிக்க வேண்டும்.

குழந்தைகள் சிறிய வயது முதலே வெறித்தனமான போட்டியுடன் படிப்பதாலும் வளர்வதாலும் சுயக்கட்டுப்பாடு, தன்னொழுக்கம் ஆகியன போய் விடுவதால், வெறும் DOMINATING CHARACTERஆக வளர்ந்து தங்கள் வாழ்க்கைத் தேவையை மட்டும் பூர்த்தி செய்து கொண்டு தனித்தீவாய் வாழ்கிறார்கள். சமுதாயத்தைப் பற்றிக் கவலையும் இல்லைக இந்த மனப்பான்மையை மாற்றும் வகையில் கல்வி இருக்க வேண்டும்.

இக்காலக் கல்வியின் மூலம் வாழ்க்கையின் தேவைகள் பூர்த்தியானாலும் மனிதனுக்குள் சோர்வும் மனவுலைச்சமும் ஏற்படுகின்றன. அதைவிட அவன் ஆன்மீக பலம் காய்ந்து சருகாகின்றது.கண்மூடித் தனமான ஒரு எந்தரமாக மனிதன் மாறுவதைக் கல்வி கவனிப்பது அவசியம் ஆகும்!

வெறும் புத்தக அறிவை மட்டும் தருவது மாபெரும் குற்றம்! வாழ்க்கையின் ஒவ்வொரு சவால்களையும் சந்திக்கும் மனபலம் தராத கல்வி குற்றம் ஆகும்! ஆன்மீக அறிவை ஊக்குவிக்காத கல்வியும் குற்றம் ஆகும்! வாழ்க்கையின் நியதிகளைக் கற்றுத்தராத வெறும் ஏட்டுப்படிப்பு வீணுமாகும், குற்றமும் ஆகும்!

மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் சுமூகமாக ஒருங்கிணைந்து வாழ்வதே ப்ரபஞ்சத்தின் அடிப்படை நியதி. இதை ஒவ்வொரு மாணவனுக்குள்ளும் கல்வி வேர் ஊன்றிடச் செய்வதே அதன் தலையாயப் பணி ஆகும்!

சமுதாயப் பொறுப்புணர்வினை மீட்டுருவாக்கம் செய்யும் ஒரு தொழில்நுட்பமாகவே கல்வி இருக்க வேண்டும்.

தனிமனித வாழ்க்கையையும் சமுதாய உறவையும் சீராக ஒருங்கிணைத்து வாழ மாணவர்களுக்குக் கற்றுத் தருவது மிக முக்கியம். இக்கால மாணவர்கள் சமுதாயத்துடன் அதிகம் தொடர்பு கொள்வதில்லை!

தனிமனிதர்களுக்குள் ஒருங்கிணைப்பும் புரிந்து கொள்ளும் பக்குவமும் உலகம் முழுதும் பரவும் போது உலக அமைதி ஏற்படும். இதைப் பள்ளிகள் கல்வி மூலம் மாணவர்களான நாளைய சமுதாயத்துக்கு அளிக்க வேண்டியதே கல்வியின் மிக அத்யாவிசயமான உடனடித் தேவை!